Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, APRIL 10, 2025

வியாழக்கிழமை 10, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர்: 198 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## சீனா மீது 104% வரி




அமெரிக்க பொருட்கள் மீது விதித்த 34 சதவீத பதிலடி வரியைத் திரும்பப் பெற சீனாவுக்கு விதித்த 24 மணி நேரக் கெடு முடிந்த நிலையில், சீனா மீது 104% வரி விதிக்கப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# ட்ரம்பின் பரஸ்பர வரி விதிப்பு விவகாரம்:

# “என் கழுத்தில் முத்தம்”



உலகளாவிய வரிகளை விதித்த பிறகு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தன்னை அழைத்த வெளிநாட்டுத் தலைவர்களை பகிரங்கமாக அவமானப்படுத்தினார்.

குடியரசுக் கட்சி நன்கொடையாளர் நிகழ்வின் போது பேசிய ட்ரம்ப், “இந்த நாடுகள் என்னை அழைக்கின்றன, என் கழுத்தை முத்தமிடுகின்றன. அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்ய துடிக்கிறார்கள். தயவுசெய்து, ஐயா, ஒரு ஒப்பந்தம் செய்யுங்கள் என்கின்றனர்.”

அமெரிக்கா விதித்த பரஸ்பர வரிகள் தொடர்பாக அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்பும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

## இன்று சர்வக்கட்சி மாநாடு

இலங்கை மீது அமெரிக்கா விதித்துள்ள புதிய வரி தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அனைத்து கட்சிகளின் தலைவர்களையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இன்று வியாழக்கிழமை (10) சந்திக்கவுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து விவாதிக்க 12 எதிர்க்கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்கக் கோரியதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## “நானும் எடுத்துரைப்பேன்”

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள பரஸ்பர வரி விதிப்பால், தேயிலை, இறப்பர், இலவங்கப்பட்டை, ஆடை உற்பத்தி போன்ற துறைகளின் மீதான தாக்கத்தை, சர்வக்கட்சி மாநாட்டில் எடுத்துரைப்பேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



## “செனட் சபையினரை சந்தித்து பேசவும்”

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரிகள் தொடர்பில் கலந்துரையாட உடனடியாக செனட் சபை மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களை சந்திக்குமாறு அரசாங்கத்திடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



## “ட்ரம்பின் தீர்மானம் பாதிப்பை ஏற்படுத்தும்”

அமெரிக்காவின் தீர்மானம் இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வரியை விதித்த பின்னர் குழுவை அமைத்து பிரயோசம் இல்லை என்றார்.

தொடர்ச்சி P2



## வெள்ளி முதல் விடுமுறை



2025ஆம் ஆண்டுக்கான அரசாங்க பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் வெள்ளிக்கிழமை (11) முடிவடையும்.

முதல் தவணையின் மூன்றாம் கட்டம் ஏப்ரல் 21ஆம் திகதி தொடங்கி 2025 மே 09ஆம் திகதி முடிவடையும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “மாகாணசபைக்கு பின் புதிய அரசியலமைப்பு”

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதில் உறுதியாக உள்ளோம் என தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து புதிய அரசியலமைப்பு உருவாக்க பணிகளை மேற்கொள்வோம் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(08) இடம்பெற்ற அமர்வின் போது, பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதியைப் பெற்றுக்கொடுக்கும் கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு. இருப்பினும் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை மேற்கொள்ள முடியாது.



தொடர்ச்சி P2

## கிழக்கு உபவேந்தர் கடத்தலில் பிள்ளையான் கைது

### பட்டாசு கொளுத்தி மக்கள் மகிழ்ச்சி

கனகராசா சரவணன்

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க



அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## “83 கலவரத்தை விசாரிக்கவும்”

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டதை போன்று தமிழ் மக்களுக்கு எதிராக 1983இல் இடம்பெற்ற கலவரம் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கையைத் தயாரிக்கவும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.



தொடர்ச்சி P2

### மு.கா. சுவரொட்டிகள் ஒட்டிய

## மூவருக்கு ரூ.120,000 தண்டம்

பேரின்பராஜா சபேஷ்

தேர்தல் சட்ட விதிகளை மீறி சுவரொட்டிகள் ஒட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவருக்கும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் (120,000) தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட விதிகளை மீறி மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் சுவரொட்டிகள் ஒட்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவர், செவ்வாய்க்கிழமை(08) அதிகாலை ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர்களை செவ்வாய்க்கிழமை(08) ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் தலா நாற்பதாயிரம் வீதம் மூவரையும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் தண்ட பணம் செலுத்துமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

அதிகாலை வேளையில் வீதியோர சுவர்களில் சுவரொட்டிகளை ஒட்டி கொண்டிருக்கும் போது இரவு நேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவினர் அவர்களை கைது செய்தனர்.




தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ட்ரம்பின் பரஸ்பர வரி விதிப்பு விவகாரம்:

## “சென்ட் சபையினரை சந்தித்து பேசவும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) விசேட கூற்றை முன்வைத்து கேள்வி எழுப்புகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

கனடா, மெக்சிகோ மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் தீர்வை வரி விதிப்பை அமெரிக்கா ஜனாதிபதி அறிவித்தார். இந்த வரி விகித மாற்றங்களால் நாட்டிற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து நான் இந்த பாராளுமன்றத்தில் 19.02.2025 ஆம் திகதி அன்று கேள்வி எழுப்பினேன். எவ்வாறாயினும், இந்த விடயத்தில் அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே செயலற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்தது. அண்மையில் இலங்கை ஏற்றுமதிகளுக்கு 44% பரஸ்பர வரி விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் தமது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளது.

அமெரிக்க செனட் சபையில் இலங்கை நட்புறவுச் சங்கம் (Sri Lanka Caucus) அமைந்து காணப்படுகிறதா? ஆம் என்றால், செனட் சபையில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்? அந்த உறுப்பினர்கள் யாவர்? அந்த உறுப்பினர்கள் எந்த மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்?

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் இலங்கை-அமெரிக்கா நட்புறவுச் சங்கம் அமைந்து காணப்படுகின்றதா? ஆம் என்றால், பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகிப்போர்களினது எண்ணிக்கை யாது? அந்த உறுப்பினர்களின் பெயர்கள் யாது? அவர்கள் எந்த மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்?

இந்த நட்புறவுச் சங்கங்களின் உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு நமது நாட்டின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள 44வீத வரிவிதிப்பு பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? 2025.03.15 ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி, தற்போது நியமிக்கப்பட்டுள்ள தூதுக்குழு பிரதிநிதிகள் இந்த விவகாரத்தில் நாட்டின் சார்பில் என்ன முன்னேற்றங்களுக்கு வந்துள்ளனர்?

இந்தக் குழுவினர் அமெரிக்காவிற்குச் சென்று, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண என்ன பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்? எந்தெந்த நிறுவனங்களோடும், எந்தெந்த நபர்களோடும், எந்தெந்த குழுக்களுடனும் இந்த கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்? இதன் முன்னேற்றம் யாது? என்றும் வினவினார்.

## “என் கழுத்தில் முத்தம்”



## “ட்ரம்பின் தீர்மானம் பாதிப்பை ஏற்படுத்தும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம் பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீர்வை வரி உலகளாவிய ரீதியில் தற்போது பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. இலங்கையின் சேவை மற்றும் இதர துறைகளும் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையினால் பெரும்பாலான வலய நாடுகள் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு அப்பாற்பட்டு செயல்பட உத்தேசித்துள்ளன.

அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள 44 சதவீத வரியை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது?. அமெரிக்காவின் புதிய வரி கொள்கை தொடர்பாக பெரும்பாலான நாடுகள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இருந்தே அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. ஆனால், இங்கு வரி விதிக்கப்பட்டதன் பின்னரே அரசாங்கம் குழு அமைத்து ஆய்வு செய்யத் தீர்மானித்துள்ளது. அமெரிக்காவின் தீர்மானம் இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

நெருக்கடியான நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். தொழிற்சங்கங்களைத் தூண்டிவிட்டு வீதிக்கு இறக்கி மக்களை நெருக்கடிக்குள் தள்ளமாட்டோம். பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு எவ்வாறு அமெரிக்காவின் தீர்மானத்தை முகாமைத்துவம் செய்வது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

## வெள்ளிமுதல் விடுமுறை



இதேவேளை, 2024ஆம் ஆண்டு 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், 2025ஆம் ஆண்டு 6ஆம் வகுப்புக்கு மாணவர்களை சேர்ப்பது தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விண்ணப்பங்களை ஏப்ரல் 30ஆம் திகதி வரை ஒன்லைன் முறை மூலம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் என்று அமைச்சு கோரியுள்ளது.

## “மாகாண சபைக்கு பின் புதிய அரசியலமைப்பு”

நிறுவன கட்டமைப்பின் ஊடாகவே விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்கள் தோல்வியடைந்துள்ளன அதனால் தான் நீதி பொறிமுறையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.ஆகவே இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.மீண்டும் அசாதாரண சூழல் தோற்றம் பெறாத வகையில் நிறுவன கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்பட வேண்டும்.

இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் காணாமல் போனோர் அலுவலகம் ஆகியன மீது பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்குப் பிரதான காரணம் அந்த அலுவலகங்கள் பெயரளவில் ஸ்தாபிக்கப்பட்டமையாகும்.

இதனை திருத்தவே நாங்கள் முயற்சிக்கின்றோம். காணாமல் போனோர் தொடர்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவை கடந்த 16 ஆண்டுகாலமாக விசாரிக்கப்படுகின்றன.

இது இலகுவானதொரு விடயமல்ல, இருப்பினும் நீதியை நிலைநாட்ட நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு விசேட குழுவை நியமிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதில் உறுதியாக உள்ளோம்.

அதேபோன்று மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து புதிய அரசியலமைப்பு உருவாக்க பணிகளை மேற்கொள்வோம். நாட்டு மக்களின் அபிலாசையுடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும். யாப்புருவாக்க பணிகள் வினைத்திறனான வகையில் முன்னெடுக்கப்படும் என்றார்.

## கிழக்கு உபவேந்தர் கடத்தலில் பிள்ளையான் கைது

கொழும்பில் இருந்து வருகைதந்த கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு (சிஐடி) யினர் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலளத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை(08) இரவு கைதுள்ளனர்.

உபவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத், கடந்த 2006 டிசம்பர் 15 ம் திகதி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் பிரயாணித்த நிலையில் அவர் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்

இந்த சம்பவம் தொடர்பாக சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொண்டுவந்த நிலையில் பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ள கொழும்புக்கு கொண்டு சென்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிள்ளையான் கைது செய்யப்பட்ட போது, மட்டக்களப்பு நகரில் மக்கள் பட்டாசுகளை கொளுத்தி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## மூவருக்கு ரூ.120,000 தண்டம்

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து ஒரு தொகுதி சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டன. இவற்றில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சின்னம் மற்றும் வேட்பாளரின் படங்கள் அச்சிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## “83 கலவரத்தை விசாரிக்கவும்”

பட்டலந்த வதை முகாம் விடயத்துடன் தொடர்புடையவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால், வடக்கில் கிழக்கில் தமிழ் பிரதேசங்களில் பல விடயங்கள் நடந்துள்ளன. 1983இல் தமிழ் மக்கள் கொழும்பில் இருந்து விரட்டப்பட்டனர். சிறைகளில் தங்கதுரை, குட்டிமணி ஆகியோர் சிறைகளில் படுகொலை செய்யப்பட்டனர். 83 கலவரம் வெலிக்கடை சிறைச்சாலையிலேயே உருவாக்கப்பட்டது. இந்த கலவரம் தமிழருக்கு எதிரானது என்பதனால் அது தொடர்பான விசாரணைகள் கைவிடப்பட்டது. இந்நிலையில், புதிய அரசாங்கம் 83 கலவரத்தில் படுகொலை செய்தவர்கள், படுகொலை செய்யப்பட்டவர்கள், அதற்கு உடந்தையாக இருந்தவர்களை கண்டுபிடிப்பதற்காக அறிக்கையை சமர்ப்பிக்க குழுவை அமைக்க வேண்டும் என்றார்.



## சீனா மீது 104% வரி




சீனா தனது 34% வரி அதிகரிப்பைத் திரும்பப் பெறவில்லை என்றால், மறுநாள் அதாவது, ஏப்ரல் 9-ம் திகதி முதல் சீனா மீது 50% கூடுதல் வரிகளை அமெரிக்கா விதிக்கும். கூடுதலாக, சீனாவுடனான அனைத்து பேச்சுவார்த்தைகளும் நிறுத்தப்படும். பிற நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் உடனடியாக நடைபெறும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், செவ்வாய்க்கிழமை (08) எச்சரித்திருந்தார்.

இந்த நிலையில், 24 மணி நேரக் கெடு முடிந்தும் அமெரிக்கா மீதான 34 சதவீத வரி விதிப்பை சீனா திரும்பப்பெறவில்லை.

இதனையடுத்து சீனா மீது 104 சதவீத வரி விதிக்கப்படுவதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. இந்த வரிவிதிப்பு புதன்கிழமை (09) முதல் அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# வேன் மோதி கான்ஸ்டபிள் பலி

நிக்கவெரட்டிய - ரஸ்நாயக்கபுர, கடிகாவ பகுதியில் செவ்வாய்க்கிழமை(09) இரவு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், வேன் மோதி உயிரிழந்துள்ளதாக ரஸ்நாயக்கபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் நிக்கவெரட்டிய மொன்னகுளம கரிஹட்டிக்குளத்தை சேர்ந்த எச்.எம்.உபுல் மதுஷங்கா(37) ரஸ்நாயக்கபுர பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் திருமணமாகாத ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

ரஸ்நாயக்கபுராவின் கடிகாவா பகுதியில் செவ்வாய்க்கிழமை (08) இரவு 8.00 மணியளவில், மற்றொரு கான்ஸ்டபிளுடன் வாகனங்களை சோதனை செய்து கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வெற்றிடமாகவுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும்

# “அதிபர் நியமனம் வழங்கப்படும்”

வெற்றிடமாகவுள்ள அனைத்து பாடசாலைகளுக்குமான அதிபர் நியமனங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமரும் கல்வி, உயர்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) இடம்பெற்ற வாய் மூல விடை க்கான வினா நேரத்தில் அமில பிரசாத் எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் பிரதமர் கூறுகையில்,

கடந்த அரசாங்கம் பாடசாலை அதிபர்களை நியமிக்கும் நடவடிக்கைகளில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்திருந்தது. எந்த ஒரு முறைமையையும் பின்பற்றாமல் பதில் அதிபர்களை நியமித்திருந்தது.

அதனால் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்த விடயத்தில் தேவையற்ற பிரச்சினையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த தவறை தற்போதைய அரசாங்கம் நிவர்த்தி செய்து வருகிறது. உரிய முறையை பின்பற்றி தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு இணங்க அதிபர்களாகப் பதவி வகிக்கத் தகுதியுள்ள வர்களுக்கு அவர்களது கல்வித் தகைமைக்கு அமைய நேர்முக பரீட்சை நடத்தப்பட்டு நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



அதற்கிணங்க வெற்றிடம் காணப்படும் தேசிய பாடசாலைகளுக்கும் அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு என வெவ்வேறு நடைமுறைகளை பின்பற்றாமல் அனைத்து பாடசாலைகளுக்கும் ஒரே விதமான முறைமையையே பின்பற்றி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றார்.



## கிணற்றிலிருந்து

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை மில்க் போர்ட் வீதியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து புதன்கிழமை (09) அன்று இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் மாடு மேய்க்கும் பணியில் ஈடுபட்டு வந்த 30 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ் மரணத்துக்கான காரணத்தை கண்டறிய வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி விபத்தில் 12 பேர் காயம்

கண்டி, பேராதனை வீதியில் உள்ள கிங்ஸ்வுட் கல்லூரிக்கு அருகில் லொறி ஒன்று வீதியை விட்டு விலகி, முச்சக்கர வண்டி மற்றும் பாதசாரிகள் மீது மோதியதில் 12 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பேராதனையிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற லொறி செவ்வாய்க்கிழமை (08) இரவு பிரேக் செயலிழந்ததால் வீதியையை விட்டு விலகிச் சென்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த ஆறு பேர் கண்டி தேசிய மருத்துவமனையிலும், மேலும் ஆறு பேர் பேராதனை போதனா மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனை வட்டாரங்களின்படி, காயமடைந்த பலரின் கால்கள் உடைந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

# பல நாள் திருடர்கள் இருவருக்கு விளக்கமறியல்

■ செ.தி.பெருமாள்



சமையல் எரிவாயு, ஆடு மற்றும் புதிய கூரை தகடுகள் திருடிய சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், கைது செய்யப்பட்ட இருவரும், ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மஸ்கெலிய சாமிமலை கிலனுஜி பிரிவில், நான்கு மாதங்களுக்கு முன்பு குடியிருப்பாளர் ஒருவர் வீட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் காணாமல் போயிருந்தமை தொடர்பில், மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது

இந்த சம்பவம் தொடர்பில், மஸ்கெலிய பொலிஸ் நிலைய குற்ற தடுப்பு பிரிவினர் சனிக்கிழமை (05) இருவரை கைது செய்துள்ளனர்

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, வேறொரு வீட்டில் இருந்து சமையல் எரிவாயு சிலிண்டர் மீட்டெடுக்கப்பட்டது .

அதே தோட்டத்தில் மற்றுமொரு குடியிருப்பாளரின் ஆட்டுத் தொழுவத்தில் இருந்து, ஆடு ஒன்று, கடந்த வாரம் காணாமல் போயிருந்தது. இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், அருகில் உள்ள தோட்டத்தில் இருந்து ஆடு மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் புதிய வீடுகளின் வீடு ஒன்றில் கூரை தகடுகள் களவாடப்பட்டிருந்தன. கூரை தகடுகளை தாங்களே களவாடிச் சென்றதாக, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்

குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் கடந்த 5 ம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டபோது இருவரையும் பதினான்கு நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# வயோதிபர் அடித்துக் கொலை

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கொலை செய்யப்பட்ட நிலையில், 63 வயதான நபர் ஒருவரின் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளத்துச்சேனை - பேரில்லாவெளி பகுதியில் செவ்வாய்க்கிழமை (08) இரவு இடம்பெற்றுள்ளது.

கொலையாளியைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், கொலைக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 12 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணத்தில் சுமார் 305 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் செவ்வாய்க்கிழமை (08) அன்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை கடற்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றைக் கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவதானித்து குறித்த படகைக் கடலினுள் வழிமறித்து சோதனையிட்டபோது அதற்குள் கேரள கஞ்சா பொதிகள் காணப்பட்டன.

அதனை அடுத்து படகில் இருந்த வடமராட்சி கிழக்கு, முள்ளியான் பகுதியைச் சேர்ந்த படகோட்டியைக் கைது செய்த கடற்படையினர் கஞ்சா போதைப்பொருளுடன் படகையும் கைப்பற்றினர்.



கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா கடல் நீரில் நனைந்த நிலையில் காணப்பட்டது என்றும், ஈரத்துடன் அதன் எடை 304 கிலோ 600 கிராம் என்றும் தெரிவித்த கடற்படையினர், அதன் பெறுமதி சுமார் 12 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா மற்றும் படகு என்பவற்றுடன், கைது செய்யப்பட்ட நபரையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் கடற்படையினர் ஒப்படைத்தனர்.



# மோடியை சந்தித்தார் நாமல்

இந்தியாவில் நடைபெற்ற ‘ரைசிங் பாரத்’ மாநாட்டில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இந்திய பிரதமர் மோடியை சந்தித்துள்ளார்.

தெற்காசியப் பிராந்தியத்திற்கான வளர்ச்சிக்கான பட்டியல் (The South Asian Platter: Menu for Groth) என்ற தொனிப்பொருளில் ‘ரைசிங் பாரத்’ மாநாடு செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்றது.

வளர்ந்து வரும் இளம் தலைவர்களின் கண்ணோட்டத்தில் பிராந்திய வளர்ச்சியை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு, கடந்த காலத் தலைமைத்துவ அனுபவங்களுடனும், எதிர்காலத்திற்கான அவர்களின் பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வையுடன் கலந்துரையாடியுள்ளனர்.

# ரூ.5,000 போலி நாணயத்தாள்களுடன் பெண் கைது

5,000 ரூபாய் போலி நாணயத்தாள் இரண்டை தன்வசம் வைத்திருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

மஹரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மஹரகம பமுனுவ பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது, சந்தேக நபரிடம் இருந்த இரண்டு போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு நோட்டுகளும் ஒரே எண்ணில் அச்சிடப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரான பெண், கொஸ்கம, அகராவிட்ட, ஆனந்தகம பகுதியைச் சேர்ந்தவர்.

# மாணவியின் கன்னத்தை பஸ்ஸிலேயே பதம்பார்த்த ஆசிரியை

■ எஸ்.சதீஸ்

தனியார் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த போது, மாணவியின் கன்னத்தில் அறைந்த ஆசிரியைக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் ஹட்டன் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றின் ஆசிரியையே, மாணவியின் கன்னத்தில் பஸ்ஸில் வைத்து திங்கட்கிழமை (07) மாலை, டிக்கோயா பகுதியில் வைத்து அறைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, பாடசாலை நிறைவடைந்த பின் ஹட்டனில் இருந்து டிக்கோயா ஊடாக போடைஸ் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள், பொதுமக்கள் என பலரும் பயணித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, மாணவியின் கால், ஆசிரியை ஒருவரின் சாரியில் மிதி பட்டுள்ளது. இதனால், ஆத்திரமடைந்த ஆசிரியை, பஸ்ஸில் வைத்தே, அந்த மாணவியின் கன்னத்தில் பளார், பளார் என்று அறைந்துள்ளார். அத்துடன், தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

**“ மாணவியின் கால், ஆசிரியை ஒருவரின் சாரியில் மிதி பட்டுள்ளது. இதனால், ஆத்திரமடைந்த ஆசிரியை, பஸ்ஸில் வைத்தே, அந்த மாணவியின் கன்னத்தில் பளார், பளார் என்று அறைந்துள்ளார். அத்துடன், தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்**

ஆசிரியைக்கு எதிராக, ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான மாணவி, டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முறைப்பாடு தொடர்பில், ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கற்றுக்கொடுக்கக் கூடாது; கற்றுக்கொள்ள வழிகாட்டுதல் அவசியம்

குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பது என்பதை அவர்களின் பெற்றோர்களால் அடைய முடியாத இலக்குகளை நோக்கி அவர்களை வழிநடத்துவதை உள்ளடக்குகிறது. ஒருவரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் குழந்தைகள் மூலம் நிறைவேறாதபோது, வெறுப்பு, மாயை, பெருமை, ஆணவம் போன்ற கெட்ட எண்ணங்கள் எழுகின்றன.

குழந்தைகள் கல்வியில் கவனம் செலுத்தாத போது அவர்கள் மீது வெறுப்பும் கோபமும் எழுவதற்கு இதுவே காரணம். நீங்கள் உள்ளே நன்றாக இருந்தால், வெளியேயும் நன்றாக இருப்பீர்கள். உள்ளே அழுக்கு இருந்தால், அழுக்கு வெளியே வரும். எனவே, நாம் செய்ய வேண்டியது இந்த உட்புறத்தை மேம்படுத்துவதாகும்.

எங்களுடைய மாணவர்கள் என்றோ ஒருநாள் உயர்ந்த நிலைக்கு செல்வார்கள் என் நல்ல எண்ணத்துடன் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். அதனால்தான், பலரும் ஆசிரியர்களாகவே இருக்கும் போது, அவர்களிடம் கற்றவர்கள் உயர்ந்த பதவிகளை வகிக்கின்றனர். அதனால்தான், ஆசிரியர்கள் பணி அளப்பரியது என்கின்றனர்.

பல நாடுகளில் ஆசிரியர்களுக்கு நல்ல மரியாதை வழங்கப்படும். நமது நாட்டை பொறுத்தவரையில் ஒரு சில ஆசிரியர்களின் செயற்பாடுகளால், முகஞ்சுளிக்க வேண்டிய நிலைமை பலருக்கும் ஏற்பட்டுள்ளது. மாணவிகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தல் உட்பட, மாணவர்களைக் கடுமையாகத் தாக்கியும் விடுகின்றனர்.

மாணவர்களைக் கண்டிக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இடமில்லை. எனினும், எதற்காகக் கண்டிக்க வேண்டும் என்பதை ஆசிரியர்கள் புரிந்துகொள்ளவேண்டும். பஸ்ஸில் பயணிக்கும் போது, தன்னுடைய சேலையை மிதித்துவிட்ட குற்றத்துக்காக, மாணவியின் கன்னத்தைப் பதம் பார்த்த ஆசிரியை தொடர்பான செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்விடத்தில் ஆசிரியை பாரிய தவறு செய்துள்ளார்.

கடந்த காலங்களில் பாடசாலைகளில் குளப்படிகளைச் செய்துவிட்டால், பிரம்பு முறிய, முறிய அடித்துவிடுவார்கள். தன்னை ஆசிரியர் தண்டித்து விட்டார் என வீட்டில் முறைப்பாடு செய்தால், தாய், தந்தையர் அல்லது இவ்விருவரும், ஏன் குழப்படி செய்தாய், என கேட்டுக் கேட்டுத் தண்டிப்பார்கள். எனினும், அவ்வாறான தண்டனையைத் தற்காலத்தில் இருப்பவர்கள் அனுபவித்திருக்க மாட்டார்கள்.

ஒரு மரத்தைக் கனி கொடுக்க கட்டாயப்படுத்துவது சாத்தியமில்லை. இருப்பினும், மரத்திற்குத் தண்ணீர், மருந்து மற்றும் உரம் வழங்கி நன்கு பராமரித்தால், மரம் நன்றாக வளரும். மரம் நன்றாக வளரும் போது, அது பூக்களையும் பழங்களையும் உற்பத்தி செய்கிறது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்கள் குழந்தைகளுக்குப் பின்பற்ற வேண்டிய முறை இதுதான்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவு வழங்கி அவர்களை வளர்க்க வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு கற்பிக்கக் கூடாது. கற்றுக்கொள்ள வழிகாட்டுதலும் உந்துதலும் கொடுக்க வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். இந்த வழியில், குழந்தைகள் சரியான வயதில் கற்றுக் கொள்கிறார்கள்.

வளர்க்கும் போது ஒழுக்கத்தையும் கற்பிக்க வேண்டும். மாணவர்களிடத்தில் ஒழுக்கத்தை எதிர்பார்க்கும் ஆசிரியர்களுக்கு ஒழுக்கமாக நடந்து கொள்வது காலத்தின் தேவையாகும்.



தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# திருடப்பட்ட கூட்டமைப்பு

முருகானந்தம் தவம்

மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இம்முறை பல வரலாற்றுப் பதிவுகளும் இடம்பெறவுள்ளன.

அதாவது, உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகளவான அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடும் தேர்தல்,அதிகளவான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட தேர்தலாகும்.

நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு இத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், 8,300க்கு மேற்பட்ட ஆசனங்களுக்காக 80,000 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் பல்வேறு அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் களமிறங்குகின்றனர்.

இதில், சில கூட்டணிகள் வெற்றிகரமாக அமைக்கப்பட்டபோதிலும், பல கூட்டணிகளின் பேச்சுக்கள் தோல்வியடைந்து கூட்டணி முறிவுகளும் இடம்பெற்றுள்ளன. இதில் பிரதான சில தமிழ்த் தேசிய கட்சிகள் தேர்தல் முடிவடைந்த பின்னர் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கத் தனிப்பெரும்பான்மை கிடைக்காவிட்டால், அப்போது ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணைந்த ஆட்சியமைப்பது தொடர்பில் பேசலாம் என்ற திட்டத்துடனும் உள்ளன.

இவ்வாறாக வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற அமைக்கப்பட்ட கூட்டணிகளில் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' என்ற கூட்டணி விசித்திர கூட்டமைப்பாக அமைந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' என்ற கூட்டணியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் (தற்போது சிறையில்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (ஆட்கடத்தல்கள், படுகொலைகள் குற்றச்சாட்டுக்களினால் பிரிட்டன் அரசால் தடை விதிக்கப்பட்டவர்) தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி மற்றும் அமல் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் (தற்போது சிறையில்) தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகம் ஆகிய மூன்று கட்சிகள் உள்ளன.

கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் பங்காளித் தலைவர்களாகவுள்ள பிள்ளையான், கருணா அம்மான் அடுத்தவரான சதாசிவம் வியாழேந்திரன் ஆகிய இந்த மூவரின் மீதும் தமது தலைமைகளை காட்டிக் கொடுத்தல், தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்தல், குற்றச்சாட்டுக்களை விடவும் படுகொலைகள் ஆட்கடத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், கப்பம் கோரல்கள், மணல் கடத்தல்கள், காணி பிடிப்புக்கள், இலஞ்சம் கோரல், ஊழல் மோசடிகள் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இதில் பிள்ளையான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோரின் படுகொலைகள் தொடர்பாக 2015 அக்டோபர் 14ஆம் திகதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பிள்ளையான் சிறையில் இருந்தவாறே 2020 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். இதனையடுத்து, 2020 நவம்பர் 24 அன்று பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார்.

இந்நிலையில், பிள்ளையான் மீது உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குற்றச்சாட்டுக்களும் உள்ளன. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக பிள்ளையான் வாக்குமூலங்களையும் அளித்துள்ளார். இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நேர்மையாக நடைபெறுமாகவிருந்தால் பிள்ளையான் மீண்டும் சிறை செல்ல நேரிடும் என்று கூறப்படுகின்றது. இதற்கிடையில் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்படு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த செவ்வாய்க்கிழமை (08) இரவு பிள்ளையான் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கைது செய்யப்பட்டு தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்..

அடுத்தவரான கருணா அம்மான், விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து 2004இல் வெளியேறி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் புதிய அமைப்பை உருவாக்கி அதன் தலைவராகத் தன்னை அறிவித்துக் கொண்டார். அரசின் ஒட்டுக்குழுவானார். இதற்கிடையில் கருணா அணியிலிருந்து பிரிந்து சென்ற பிள்ளையான் அணியினர், மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அலுவலகங்களைக் கைப்பற்றியதை அடுத்து, 2007 அரசினால் போலிக் கடவுச்சீட்டு வழங்கப்பட்டு, ரகசியமாக லண்டனுக்குச் சென்ற கருணா அம்மான், போலி கடவுச்சீட்டு வைத்திருந்ததாக அங்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

இந்நிலையில், அரசியலில் நுழைந்த அவர், 2008 அக்டோபர் 7ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் இலங்கை பாராளுமன்றத்தின் எம்.பியாக பதவியேற்றுக் கொண்டார். அதே ஆண்டு தேசிய நல்லிணக்க மறுசீரமைப்பு அமைச்சராகவும் பதவியேற்றுக் கொண்டார். பின்னர், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து, உப தலைவராக பதவியேற்றுக் கொண்டார். இவர், 2010 பாராளுமன்றத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தேசியப் பட்டியல் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர், மக்கள் செல்வாக்கை இழந்த இவர், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தபோதும் அரசியலில் ஒதுங்கியே இருந்தார். இவர் மீது பல்வேறு படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் கோரல்கள் உள்ளிட்ட குற்றச் சாட்டுகள் உள்ளன. இவ்வாறான நிலையில்தான் இலங்கையில் கடுமையான மனித உரிமை மீறல்களுக்குக் காரணமாகக் கருதப்பட்ட இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜெயசூரியா, ஆகியோருடன் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய கருணா அம்மானுக்கும் பிரிட்டன் அரசு அண்மையில் தடை விதித்தது.

அடுத்தவர் சதாசிவம் வியாழேந்திரன், தமிழ் மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) உறுப்பினரான இவர், 2015 பாராளுமன்றத் தேர்தலில் புளொட் கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 2018 இலங்கை அரசியலமைப்பு நெருக்கடியின் போது, 2018 ஒக்டோபர் 26இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்ரமசிங்கவை பதவியில் இருந்து அகற்றி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக அறிவித்தார். இதனையடுத்து, மஹிந்த ராஜபக்ஷ தனது பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் நிரூபிக்க வேண்டி ஏற்பட்டது. அப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்த ராஜபக்ஷவின் நியமனத்தினை எதிர்த்த நிலையில், வியாழேந்திரன் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து கட்சி தாவினார். இவருக்கு 2018 நவம்பர் 2இல் ராஜபக்ஷவின் அரசில் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

பின்னர் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார் இவருக்கு மஹிந்த அரசில் தபால் சேவைகள், வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இறுதியாக நடந்த தேர்தலில் போட்டியிட முனைந்தபோதும், அவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதால் போட்டியிடமுடியாத நிலை ஏற்பட்டது.

ஆக, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மையமாக வைத்து 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கூட்டமைப்பின் பங்காளித் தலைவர்களாக உள்ளவர்களில் ஒருவரான பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க சிவநேசதுரை சந்திரகாந்தன், கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், அமல் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகிய மூவரும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவே உள்ளனர்.

அதுமட்டுமல்ல, 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் பெயரை முறையற்ற விதத்தில் தமது தேர்தல் அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தியுள்ளனர். இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு, மேற்படி கூட்டுக்கு எமது அனுமதியோ அல்லது சம்மதமோ இல்லாமல் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் பெயரைப் பயன்படுத்தியுள்ளதைக் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம். தொடர்ந்தும் பெயரைப் பயன்படுத்தினால் நீதிமன்றத்தை நாடுவோம் என கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் உண்மையான தலைவர், தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த 15.03.2025 அன்று முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான சிவனேதுரை சந்திரகாந்தன் மற்றும் வியாழேந்திரன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் தமிழர் முற்போக்குக் கழகமும் இணைந்து 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' என்ற பெயரில் ஒரு கூட்டணியை அமைத்துள்ளனர். ஆனால், 2018ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட 'கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின்' அரசியல் பிரிவாக 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் பெயரிலான அரசியல் கட்சியொன்று தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் தலைமையில் 2018இல் உருவாகி அதற்குத் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கடிதத் தொடர்பாடல்கள் 2019ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே, இந்த 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' என்ற கூட்டணியின் தலைவர்களும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களாகவும் சிறைகளில் இருந்தவர்களாகவும் இருப்பவர்களாகவும் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு'ம் இன்னொருவரிடமிருந்து திருடப்பட்டதாகவும் உள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

போருக்குப் போகும் மாவீரர்கள் போல, எதையும் சிந்திக்காமல், சூடான வார்த்தைகளைத் தமக்குப் பிடிக்காதவர்களிடம் அள்ளி வீசுவதுண்டு.

கோபம் ஒருவரை எல்லை மீறும் உணர்வுக்குள் வசப்படுத்தி விடுகின்றது. சினம் ஏற்படுவது இயல்பானது. அதற்காக தன்னை மறந்து, தகாத வார்த்தைகளைப் பேசும்போது, அதைக் கேட்ட நபரும் அம்பு போல் பாய்கின்றார்.

ஒரு கணம் அமைதியாக சந்தித்தால், சினம் அடங்கி விடும். மனிதனை மனிதன் வெறுத்தல் தகாது. பிடிக்காதவரிடம் பேசாமல் ஒதுங்குவது நல்லது.

நியாயத்தை எவரும் நிராகரிக்கும் போது, இயல்பான கோபம் வருவதுண்டு. இதற்காகக் கெட்டவர்கள் எல்லோரிடமும் மோத முடியாது.

தவறான நடத்தை உள்ளவர்கள், அதன் பிரதிபலனைப் பெற்றே தீருவார்கள். குரோதம் ஒருபோதும் சந்தோசங்களை உணராது; அறிவைக் கெடுக்கும்; பிறரின் தூற்றுதலுக்கு ஆளாவார்கள்.

வாழும் காலம் பொன்னானது. எனவே, நல்ல வழியில் வாழ்ந்தால், அ துவே நிரந்தர நிம்மதியை அளிக்கும். சினம், நற்குணம் அறியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### விளம்பரப் பலகையாக மாறிபோன கடிகார கோபுரம்



ஹட்டன் நகரில் மையத்தில் உள்ள கடிகார கோபுரம் ஒரு வருடத்திற்கும் மேலாக வேலை செய்வதை நிறுத்தியது, இப்போது அந்த கடிகார கோபுரம் ஒரு விளம்பரப் பலகையாக மாறிவிட்டது.

மணிக்கூட்டுக் கோபுரம் ஒரு வருடத்திற்கும் மேலாக செயலிழந்து விட்டதாகவும், ஹட்டன்-டிக்கோயா நகரசபை அதிகாரிகள் அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர்.

மேலும், இந்தக் கடிகாரக் கோபுரம் தற்போது பல்வேறு விளம்பரங்களைக் காட்டும் விளம்பரப் பலகையாக மாறிவிட்டது என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் உரிய கவனம் செலுத்தாதது மிகுந்த வருத்தத்திற்குரியது என்றும் உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர்.

ஹட்டனை சுற்றியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள், தங்களுடைய பிரதான நகரமாக ஹட்டனுக்கே வருகின்றனர். அத்துடன், சிவனொளிபாதமலைக்கு சென்று திரும்புவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஆகையால், மணிகூட்டு கோபுரம், சரியான நேரத்தைக் காண்பிக்கும் வகையில் அந்த கடிகாரத்தைத் திருத்த வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

– சுதத் எச்.எம்.ஹேவா

# ‘யோகட்’

இரா.சிவலிங்கம்

அன்று ஞாயிற்றுக்கிழமை, வீட்டில் கோழிக் கறிசாப்பாடு. உறவினர்கள் எல்லோரும் சந்தோசமாகச் சாப்பிட்டார்கள்.

செல்வத்தின் தங்கையின் மகன் சுரேஸ், எல்லோருக்கும் யோகட் வாங்கி வந்து கொடுத்தான். செல்வத்தின் மனைவி அழகி மட்டும், பிறகு சாப்பிடலாம் என இருந்து விட்டாள். காலையில் இருந்து வீட்டு வேலை, சமையல் வேலை, உடைகள் துவைத்தல் என எல்லா வேலைகளையும் மாறி, மாறி செய்து கொண்டிருந்தாள்.

அந்த வீட்டில் எல்லா வேலைகளுமே அழகிதான். குடும்பப் பொறுப்புக்கள் எல்லாவற்றிற்கும் அவளைதான் நாடவேண்டும். செல்வத்தின் குடும்பத்திற்கு வாழ்க்கைப்பட்டு வந்ததிலிருந்து உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து போனாள். அவள் கண்ட சுகங்கள் ஒன்றுமில்லை.

எல்லா வேலைகளையும் முடித்து விட்டு வந்து தனக்குரிய யோகட்டைப் பார்க்கின்றாள். அது அங்கு இல்லை. அவள் யோகட்டைச் சாப்பிட்டாளா? என்று யாருமே கேட்கவும் இல்லை. கொடுக்கவும் இல்லை. இந்த வீட்ல எப்பவும் அப்படித்தான் என்னை எல்லோரும் மறந்து விடுவார்கள். நா ஒரு ஆள் இருக்கின்றதையே அடிக்கடி மறந்து விடுவார்கள். “என்னங்க எனக்கு எங்க யோகட் என கேட்டாள்”. கணவன் “அதுவா... அத அம்மாகிட்ட கொடுத்துட்டேன்” என சர்வசாதாரணமாகச் சொன்னான்.

“ஏன்? எனக்கு ஒன்னு வைக்கனுமுனு ஒங்களுக்கு தோணலையா?, ஒங்க அம்மா சாவப்போற வயசுல அவங்களுக்கு யோகட் மட்டும் தான் இப்ப குறைச்சலா இருக்கு, அதுக்கெல்லாம் சாப்புட்டதும் யோகட் கேக்குது. கலிகாலம்னு” முணு முணுக்கத் தொடங்கினாள்.

அம்மாவுக்கு கடையில் வாங்கி எதை கொடுத்தாலும் விரும்பிச் சாப்பிடுவது வழக்கம். “இந்தா பாருங்க ஒங்க அம்மா யோகட் கப்பை தின்னுட்டு அங்கேயே வச்சிட்டாங்க, அத யாரு எடுக்கிறதாம், எல்லாத்துக்கும் நான் தான் வேலைக்காரி, ஒருத்தி இருக்கேனே” என கத்தத் தொடங்கினாள். கணவன் செல்வம் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தான். அழகி காளியாக மாறினாள் தன்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தனக்கு யோகட் கப் கிடைக்கவில்லை என்பதை கூட மறந்து விட்டு தன்னுடைய கணவன் அவருடைய அம்மாவுக்கு அடிக்கடி எதையாவது வாங்கிக் கொடுப்பதை அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என வெகுநாட்களாக காத்திருந்தாள்.

கணவன் செல்வம், மெதுவாக சென்று “ஏன் கத்துறீங்க, வெளியிலை எல்லாம் பாக்கிறாங்க”, “இந்தா ஏ வாய கிண்டாதிங்க, பேசாம போயிடுங்க” என கரண்டியை தூக்கிப் போட்டா. செல்வத்திற்கு யார் பக்கம் பேசுகிறது என தெரியாமல் இருந்தான்.

அழகி திடீரென மாமியைப் பார்த்து, “இந்தா இந்த கிழவிதான் எல்லாப் பிரச்சினைக்கும் காரணம்” என சத்தம் போட்டாள். “ஏய் என்ன கெழவியுனு சொல்லாதே, நீ கொமரியினு நெனப்பு”. வீட்டு நிலமை மோசமாக போகிறதை உணர்ந்து இருவரையும் சமாதானப்படுத்த செய்த செல்வத்தின் முயற்சி தோல்வியடைய, வீட்டுக்கு வந்திருந்த தங்கை கீதா அண்ணனை சமாதானப்படுத்தி விட்டு தனது வீடு செல்வதற்குத் தயாரானாள்.

தொடர்ந்து இந்த வீட்டில் பிரச்சினை இருக்கக் கூடாது என எண்ணிக்கொண்டு, தன்னுடைய அறைக்கதவைப் பூட்டிக்கொண்டு அழகி, வெகு நேரம் அழுதுக்கொண்டு இருந்தாள். தன்னை யாரும் மதிக்கிறது இல்லை. எனக்கு சார்பாக யாரும் பேசுவது இல்லை. என் பேச்சையாரும் கேட்கிறது இல்லை. என்னை ஒரு வேலைக்காரி மாதிரி இந்த வீட்டில் நடத்துகின்றார்கள். எனக்கு யாருமே இல்லை என தலையில் அடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். யாரும் ஆறுதல் சொல்ல வரவில்லை என மனதில் வருந்தினாள். தனக்காக யாருமே கதைக்கவில்லையென துடித்தாள். தன்னுடைய மன வேதனையை யாரிடம் சொல்வது என துடித்தாள். வாழ்ந்த காலத்தில் இந்த குடும்பத்திற்கு உழைத்து, உழைத்துதன் சீவன் போய் விட்டது என நினைத்தாள்.

தன்னுடைய உடைகளை எடுத்து ஒரு பேக்கில் வைத்தாள். அடையாள அட்டையை எடுத்துக்கொண்டாள். பிள்ளைகளின் படங்களையும், குடும்பப் படங்களையும் எடுத்துக் கொண்டாள். கணவன் தன்னுடைய தங்கையின் குடும்பத்தை வழியனுப்புவதற்காக புகையிரத நிலையத்திற்குச் சென்று விட்டான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அழகி வீட்டை விட்டுவெளியேற முடிவெடுத்தாள். மாமியாரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அழகியை மேலும்,மேலும் மனதை வருத்தியது. தனக்கும் ஒரு யோகட் கப்பை வைத்திருக்கலாமே என நினைத்துதான் இவ்வளவுக்கும் காரணமா? ஐயோ கடவுளே என்ன சோதனை என மெதுவாக வீட்டை விட்டு வெளியேறினாள். தன்னுடைய கைத்தொலைபேசியை சுவிட்ச் ஓவ் செய்து விட்டாள்.

மத்தியானம் தொடங்கிய வாக்குவாதம் மாலை வரை தொடர்ந்தது. அழகி இம்முறை விட்டுக் கொடுப்பதாக இல்லை. கையில் பேக்குடன் நடக்கத் தொடங்குகிறாள். மனதில் பல்வேறு சிந்தனைகளுடனும், வாழ்க்கையில் வெறுப்புடனும், ஒரு வித பரிதவிப்புடனும், துக்கத்துடனும், பாதையை வெறித்துப் பார்த்தவாறு கீழே குனிந்தவாறு நடக்கின்றாள். கணவன் தன்னுடன் தகாத வார்த்தைகளால் வாக்குவாதப்பட்டதும் தனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீட்டில் இருந்த எல்லோரும் ஒரு பக்பமாகவும், பக்கச் சார்பாகவும் கதைத்தார்கள். எல்லோரும் தன்னை பிழையான ஆளாக காட்டி பல தகாத வார்த்தைகளால் முழு குடும்பமும் திட்டித் தீர்த்தார்கள். அதனால் அழகியால் வாதாட முடியவில்லை. எவ்வளவு முயன்றும் தோல்வியடைந்தவளாய் இந்த முடிவை எடுத்தாள். தனக்கு பிள்ளைகள் இருந்தும் இந்தச் சந்தர்ப்பத்தில் தனக்கு இல்லையே என மனம் வருந்தினாள். மனம் வேகமாக கடந்தால சந்தோசமான வாழ்க்கையை கொண்டு வருகின்றது.

பறவைகள் எல்லாம் தங்களுடைய கூடுகளை நோக்கி ஆனந்தமாக பறக்கின்றன. சூரியன் மெதுவாக மேற்கு வானத்தில் மறையத் தொடங்குகின்றான். மக்கள் அனைவரும் தங்களுடைய வீடுகளை நோக்கி அவசர அவசரமாக செல்கின்றார்கள். மழை வருவதற்கான அறிகுறிகள் வானத்தில் தென்படுகின்றன. மேகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கருமுகிலாக மாறி கொண்டிருக்கின்றன. வானத்தில் இடி முழக்கம் தொடங்கி விட்டது. மின்னல் பளிச் பளிச்சென்று மின்னுகிறது. அழகி அந்த நேரத்தில் தன் கால் போன போக்கில் நடக்கின்றாள். சில நேரங்களில் வேகமாகவும், மெதுவாகவும் நடக்கின்றாள். மனம் சோர்வடைந்து காணப்படுகின்றது. கண்களில் கண்ணீர் ஆறாகப் பாய்கின்றது. அடிக்கடி அதை துடைத்துக் கொண்டவளாய், திசை தெரியாமல் போகின்றாள். மெல்ல மெல்ல வெளிச்சம் குறைகின்றது. மனம் கனதியாக இருப்பதை உணர்கின்றாள். அந்த சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் கத்தி அழ வேண்டும் போல் இருக்கின்றது. மனதுக்குள்ளேயே பலமாக அழுகின்றாள். சுவாசம் வேகமாக இருக்கின்றது. இதயம் வேகமாக அடிக்கின்றது, இலேசாக தலை சுற்றுவது போல் உணர்கின்றாள். இருந்தாலும் ஒரு வைராக்கியத்துடன் நடக்கின்றாள்.

தூரத்தில் புகையிரதப் பாதை தெரிகிறது. அதைக் கண்டதும் தயங்கி, தயங்கி நடக்கின்றாள். தன்னுடைய விதியை நினைத்து வருந்துகின்றாள். தான் எடுத்த முடிவு சரியா?, தவறா? என யோசித்துப் பாரப்பதற்கான மனத்தைரியம் இப்போது இல்லை. மெதுவாக புகையிரதப் பாதையில் ஏறி நடக்கின்றாள். கால்கள் தடுமாறுகின்றன. கையில் இருந்த பேக்கை தோளில் போட்டுக் கொள்கின்றாள். போனில் இருந்த டோர்ச்சைப் போட்டுக் கொள்கின்றாள். மின்னலும், இடியும் மாறி மாறி வருகின்றது. மனதில் ஒருவித பயம் அவளை சூழ்ந்து கொள்கிறது.

திரும்பித் திரும்பி பார்க்கின்றாள். கண்ணுக்கெட்டியதுரத்தில் யாரும் வரவில்லை. நடப்பதற்கு தடுமாறுகின்றாள், மனது படபடவெனத் துடிக்கின்றது. உடல் சற்று வேர்க்கின்றது. சற்றுத் தூரத்தில் பேச்சு சத்தம் கேட்கிறது. புகையிரதம் வரும் அறிகுறியே இல்லை. கணவன், பிள்ளைகளின் நினைவு அவளை வாட்டி வதைக்கின்றது. திரும்பி வீட்டுக்குப் போய்விடலாமா என மனது சொல்கிறது. இருப்பினும், வைராக்கியம் விடவில்லை. தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தயங்குகிறாள். பிள்ளைகளை நினைக்கும் போது, அவளை அறியாமலே ஓவென கத்தி விடுகின்றாள். பின்னால் வந்தவர்கள் இவளின் அழுகுரலைக் கேட்டு வேகமாக இவளை நோக்கி வருவதை அவதானித்தவளாய், இன்னும் சற்று வேகமாகச் செல்கின்றாள்.

அழகி, புகையிரத நிலையத்துக்குள் செல்கின்றாள். சுற்றி சுற்றிப் பார்க்கின்றாள். நல்ல வேளை, அவளுக்குத் தெரிந்த யாரும் அங்கு இல்லை. நடந்து வந்த களைப்பில் அங்கிருந்த கதிரையில் அமர்கின்றாள். அன்று புகையிரதம் ஒரு மணித்தியாலம் தாமதமாகவருதாக அறிவித்தார்கள். தன் பேக்கில் இருந்த குடும்பப் படத்தை அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொண்டாள்.

வாழ்க்கையின் அர்த்தங்கள் அவளுக்குப் புரிந்தது. அன்று நடந்த சம்பவத்தை எண்ணி, எண்ணி மனம் வாடினாள். என்ன தான் வாழ்க்கையில் உறுதியோடு வாழ்ந்தாலும் கூட, சில விடயங்கள் வாழ்க்கையையே புரட்டிப்போட்டு விடுகின்றன. அவளுடைய வாழ்க்கையும் அப்படிதான்.அந்த குடும்பத்திற்குகாக அவள் செய்யாத தியாகங்களே கிடையாது. தான் செல்வத்தை விரும்பி திருமணம் முடித்த காலத்தில் இருந்து அவள் பட்ட கஷ்டங்களும் துன்பங்களும் சொல்லில் அடங்கா. அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு வாழ்ந்தவளுக்கு இன்று அனைவரும் அவளைப்பற்றிப் பேசிய வார்த்தைகள் அவளுடைய அடி மனதில் ஓடிக்கொண்டிருந்தது. புகையிரதம் வரும் சத்தம் கேட்டது. அவள் எழுந்து புகையிரதத்தில் செல்வதற்குத் தயாரானாள்.

அழகி வீட்டை விட்டுச் சென்று விட்டாள் என்ற செய்தி அந்த கிராமம் முழுவதும் தீயாய் பரவியது. வீட்டில் உள்ளவர்களும், உறவினர்களும், அக்கம் பக்கத்தாரும் அழகியைத் தேடுவதில் மும்மரமாக இருந்தார்கள். குளத்திலும், புகையிரத பாதையிலும், நீர் வீழ்ச்சிகளிலும் சென்று தேடிக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்தில் யாரோ புகையிரத்தத்தில் இருந்து பாய்ந்து விட்டாராம் என ஒருவர் ஒரு செய்தியை சொன்னார்.

செல்வத்திற்கு தலைசுற்றியது. கடவுளே அது அழகியாக இருக்கக் கூடாது. அவள் நல்லவள் அவளுக்கு அப்படியெல்லாம் ஏற்படாது. அவள் என்னை விட்டுப் போகமாட்டாள். அவளுக்குப் பிள்ளைகள் என்றால் உயிர் என எல்லா கடவுளையும் வேண்டிக்கொண்டு விபத்து நடந்த இடத்துக்கு எல்லோரும் ஓடினார்கள். செல்வம் பதற்றத்தோடு, அந்த சனக் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு அந்த உடல் யாருடையது என பார்த்தான். உடல் சிதைந்து இருந்தது. இரவில் முகம் சரியாகத் தெரியவில்லை. சற்றுத் தூரத்தில் புகையிரதம் நிறுத்தப்பட்டிருந்தது. செல்வம் துடி துடிக்கின்றான். மனைவியைத் தேடி அலைகின்றான்.

புகையிரதத்தில் ஒரு ஓரத்தில் ஜன்னல் ஓரத்தில் அழகி அமர்ந்து இருக்கிறாள். அழகியைக் கண்ட செல்வம். “ஐயோஅம்மா! என்ன விட்டுட்டு எங்கம்மா போற” என ஓடிச் சென்று அழகியை கட்டிப்பிடித்து சமாதானம் செய்து, அவளை வீட்டுக்கு அழைத்து வருகின்றான். வரும் வழியில் இருவரும் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு நடந்தார்கள்.

## உடன்பிறந்தோர் தினம்



# “நாங்க இருக்கோம்ல”

ஒருவருக்கு சகோதரரோ அல்லது சகோதரியோ இருப்பதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால், எமது சமூகத்தில் ஒரேயொரு பிள்ளை பெற்றுக்கொள்வதென்பது மிகவும் அரிது. குறைந்தபட்சம் இரண்டு முதல் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் வழக்கமே பெரும்பாலும் உண்டு.

‘நாமிருவர், நமக்கு ஒருவர்’ என்ற நிலைமை மாறி, ‘நாமிருவர், நமக்கேன் ஒருவர்’, என்ற நிலைமைக்கு பலரும் வந்து நிற்கின்றனர். உலகில் பல நாடுகளில் சனத்தொகை குறைவடைந்து கொண்டே வருகின்றது. திருமணத்தைப் பலரும் விரும்புவதில்லை. திருமணம் செய்தவர்கள் பலரும், குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்புவதில்லை.

நகரமயமாக்கலின் விளைவால் அந்த வழக்கம் குறைந்து போனாலும், இப்போதும் ‘ஒத்த பிள்ளைன்னா தனியா இருந்து கஷ்டப்படும்’ என்று சொல்லி இரண்டாவதாக இன்னொரு குழந்தைக்குத் தயாராகும் வழக்கம் இருந்து வருகிறது. இதன் பின்னிருப்பது, உடன்பிறந்தோர் இருந்தால் ஒருவரது மனோதிடம் பெருகும் என்ற நம்பிக்கையே..!

பெற்றோர், ஆசிரியர், சுற்றம் என்று மனிதர்களைப் பார்த்து எத்தனையோ கற்றுக் கொள்ளும் ஒரு குழந்தை. நட்பு இம்மூன்றுக்கும் நடுவில் பிரதான இடம் வகிக்கிறது. காரணம், ஒரே வயதையொத்த அல்லது ஒரேமாதிரியான தன்மை கொண்ட அல்லது ஒரு பிணைப்புக்கு உட்படுகிற ஈர்ப்பு கொண்டோரின் கரங்களைக் கோர்க்க வைக்கும் வல்லமை அதற்கு உண்டு.

உண்மையைச் சொன்னால் பெற்றோராகவும் ஆசிரியராகவும் தோள் தரும் தோழமையாகவும் இருப்பது உடன்பிறந்தோர் தான். சகோதரனாகட்டும், சகோதரியாகட்டும், அவர்களைப் பார்த்து நாம் நிறைய கற்றிருப்போம் அல்லது நம்மைப் பார்த்து அவர்கள் கற்றுக்கொண்டிருப்பார்கள்.

நடப்பது, ஓடுவது, பேசுவது, கல்வி கற்பது, பிறரோடு பழகுவது, தன்னை முன்னிறுத்திக் கொள்வது தொடங்கி தலைமையிடத்தை அடைவது வரை பல விஷயங்களைக் கற்றுத் தருவது உடன்பிறந்தோர்கள் தான்.

‘அவர்கள் இல்லையென்றால்..’ என்ற எண்ணத்தைச் சுழல விட்டால் கிடைக்கும் வித்தியாசங்களே அந்த உண்மையைப் பலப்படுத்தும். ஒவ்வொருவரது அனுபவங்களும் தனித்தன்மை கொண்டதாக இருக்கும்.

’நான் திண்ணைய பிடிச்சு நடந்தப்போ, என்னையப் பிடிச்சு நடந்த பய நீ’ என்ற சொலவடை தென்மாவட்டங்களில் பிரபலம்.

கேலி கிண்டலுக்காகச் சில கெட்டவார்த்தைகளுடன் இது மொழியப்பட்டாலும், ஒருவீட்டில் வளரும் பல குழந்தைகள் ஒன்றையொன்று பார்த்துக் கற்றுக்கொள்ளும் என்பது இதிலிருந்து விளங்கும்.

ஒரே நேரத்தில் ஆசிரியராகவும் தோழமையாகவும் இருக்க வல்லவர்கள் உடன்பிறப்புகளே..

அரண் போல காத்து நிற்பது என்று சொல்லும் வழக்கம் நம் முன்னோர்களிடம் உண்டு. ஆபத்தில் இருந்து காப்பது என்பதே அதன் பொருள். சில நேரங்களில் நமக்கு இடர்கள் நேரும்போது நம்மை காப்பது உடன்பிறந்தோர்களே..!

பணம் மட்டுமே வாழ்க்கை என்றாகிவிட்ட சூழலில், இச்சொல் கேலிக்குரியதாக கருதப்படலாம். ஆனால், இளமைக்காலம் தொட்டு இன்றுவரை உடன்பிறந்தோர் இல்லாத வாழ்வை ஒருவர் நினைத்துப் பார்த்தால் அந்த அருமை பிடிபடும்.

ஒரு பிரச்சினை என்று வரும்போது சகோதர, சகோதரிகளின் குடும்பங்கள் துணை நிற்கும் என்பது திரைப்படங்களில் சொல்லப்படும் கற்பனையல்ல; ஒருகாலத்தில் நம் முன்னோர்களின் வாழ்வில் பொதிந்திருந்த வழக்கமது.

உடப்பொறந்தா, உடப்பொறந்தவன் என்ற சொல்லாடலை சில வட்டார வழக்குகளில் காணலாம். ஒருவரது வாழ்வின் உயர்விலும் தாழ்விலும் அவர்கள் கண்டிப்பாக உடன் நிற்பார்கள் என்பதே இச்சொல்லாடல்கள் இடம்பெறும் உரையாடல்களில் காண முடியும்.

வெறுமனே வீரம் சார்ந்து, செல்வம் சார்ந்து உதவிக்கு வருவது என்றில்லை, ஒருவர் மனக் கஷ்டத்தில் இருக்கும்போதும் இவர்களது ஆதரவுக்கரங்கள் நீளும். ’நாங்க இருக்கோம்ல’ என்ற சத்தமே மனமொடிந்தவரின் கைகளை மேல் இழுக்கும்.

சிறு வயதிலும் கூட, நட்பு வட்டத்தில் உள்ளவர்களிடம் சொல்லும் பல விடயங்களை நாம் உடன்பிறந்தவர்களிடமும் பகிர்ந்திருப்போம். சகோதரன் - சகோதரி அல்லது சகோதரிகளுக்கிடையே இது அதிகமாக இருக்கும்.

சகோதரர்கள் இடையே முரண்கள் இருந்தாலும், ஆபத்துக் காலத்தில் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்கும் வழக்கம் இருந்திருக்காது.

அதாவது, என்னதான் சண்டை சச்சரவுகள் இருந்தாலும் அந்த பாசம் அவர்களை ஒன்றிணைக்கும். உண்மையைச் சொன்னால், சிறுவயதில் தங்களுக்கிடையே சண்டையிட்டுக் கொள்ளும் சகோதர சகோதரிகள் பிற்காலத்தில் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பார்கள் என்பது உளவியல்பூர்வமாக நிரூபணமான விஷயம்.

கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, ரசனை, எதிர் பாலின ஈர்ப்பு, சமூக முன்னேற்றம் என்று பலவற்றில் நமக்குத் துணையாகவும் வழியாகவும் இருப்பது உடன்பிறப்புகளே!

மிக முக்கியமாக, பன்னிரண்டாம் வகுப்புக்குப் பிறகு என்ன படிக்கலாம் என்ற சூழலில் மூத்த சகோதர, சகோதரியின் வழிகாட்டுதல்கள் பின்னவர்களின் வாழ்வைப் பலப்படுத்துவதாக இருக்கும். அதுவே, பின்னாளைய வாழ்வையும் தீர்மானிப்பதாக மாறும்.

ஒரே வீட்டில் பிறந்தவர்கள் வெவ்வேறு பொருளாதார, சமூகப் பின்னணியைக் கொண்டிருந்தாலும், அரசியல் ரீதியில் வேறுபட்டிருந்தாலும், வெவ்வேறு திசைகளில் வாழ்ந்தாலும், ஒருவரையொருவர் சந்திப்பது அரிதாகிப் போனாலும், அவர்கள் மீண்டும் சந்திக்கும்போது பால்யத்தில் அழுத்தமாகப் பதிந்த பொதுப்புள்ளியில் இருந்துதான் அவர்களது அன்பின் ஊற்றுத் திறக்கும். மடையாகக் கொட்டும். பெரிதாக குடும்பச் சொத்தை எதிர்பார்க்காமல், தங்களது வாழ்வை தாங்களே கட்டமைத்துக் கொண்ட சகோதர சகோதரிகளிடையே இத்தகைய காட்சியைக் காணலாம்.

அவ்வாறு தங்களைத் தாங்களே கட்டமைப்பதற்கான ஆதாரமாகவும் உடன்பிறந்தவர்களே இருந்திருப்பார்கள். ஒரு மனிதரது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்லாமல் சமூக முன்னேற்றத்திற்கும் அவர்களே பாதை வகுத்திருப்பார்கள்.

சில இடங்களில் சொத்து சார்ந்தோ அல்லது வளர்ச்சி சார்ந்தோ உடன்பிறப்புகளிடையே பூசல்கள் நிலவலாம், பொறாமைகள் பிறக்கலாம். அதற்கும் காரணம், கடந்த காலத்தின் ஏதோ ஒரு தருணத்தில் நிகழ்ந்த விலகலையோ அல்லது புரிதலின்மையையோ பொருட்படுத்தாமல் இருந்ததாக இருக்கும். எல்லா உறவுகளையும் போலவே உடன் பிறந்தவர்களை நினைக்கவும் மகிழவும் உதவுகிறது ஏப்ரல் 10 அன்று கொண்டாடப்படும் ‘உடன்பிறந்தோர் தினம்’.

(நன்றி: இணையம்)

கரீபியன் தீவு

மேற்கூரை இடிந்து விழுந்ததில்


# 79 பேர் பலி

கரீபியன் தீவு நாடான டொமினிகன் குடியரசின் தலைநகர் சாண்டோ டொமினிகோவில் உள்ள புகழ்பெற்ற இரவு நேர கேளிக்கை விடுதியில் உள்ள மேற்கூரை இடிந்து விழுந்ததில், 79 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விடுதியில் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இதில், அரசியல்வாதிகள், பேஸ்பால் விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட பிரபலங்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். அப்போது திடீரென்று கேளிக்கை விடுதியின் மேற்கூரை இடிந்து விழுந்தது. இதில் இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொண்டனர்.

மீட்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இடிபாடுகளை அகற்றி அதில் சிக்கியவர்களை மீட்டனர்.

இந்த விபத்தில் 79 பேர் உயிரிழந்தனர். 160க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இடிபாடுகளுக்கு அடியில் பலர் உயிரோடு சிக்கியிருக்கலாம் என



அஞ்சப்படுவதால் தொடர்ந்து மீட்புப் பணி நடைபெறுகிறது.

கிட்டத்தட்ட 12 மணி நேரத்திற்குப் பிறகும், இடிபாடுகளுக்கு அடியிலிருந்து உயிருடன் சிலர் மீட்கப்பட்டதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அவசரகால செயற்பாட்டு மையத்தின் இயக்குநர் ஜுவான் மானுவல் மெண்டஸ் கூறும்போது, "கேளிக்கை விடுதியின் மூன்று பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து மீட்புப்பணி நடந்து வருகிறது. நாங்கள் தொடர்ந்து இடிபாடுகளை அகற்றி மக்களைத் தேடுகிறோம்" என்றார்.

இந்த நிலையில், இந்த விபத்தில் முன்னாள் பேஸ்பால் அணி வீரர் ஆக்டேவியோ டோட்டல் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது. உயிரிழந்த மற்றவர்களை அடையாளம் காணும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சீனா



முதியோர் இல்லத்தில்

## தீ விபத்து: 20 பேர் பலி

வடக்கு சீனாவின் ஹெபே மாகாணத்தில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை (8) இரவு 9 மணியளவில் இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

தீ விபத்து குறித்து தீயணைப்புத் துறையினருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது 20 பேரின் உடல்கள் கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேலும், பலர் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்கொரியா



தென்கொரியாவில்

## ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிப்பு

ஜூன் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என, தென்கொரியாவில் இடைக்கால ஜனாதிபதி ஹான் டக்-சூ அறிவித்துள்ளார்.

தென்கொரியாவில் இராணுவ அவசர நிலை செயல்படுத்தியதற்காக அப்போதைய அதிபர் யூன் சுக்-இயோலைக் கண்டித்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

இதனையடுத்து, அவருக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்த தீர்மானம் நிறைவேறியதால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரது பதவி நீக்கத்தை அந்த நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றமும் கடந்த வாரம் உறுதி செய்தது.

தென்கொரிய அரசியலமைப்பின் படி ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்படும்போது அடுத்த 2 மாதங்களுக்குள் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும். எனவே ஜனாதிபதி தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி, எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என, அந்த நாட்டின் இடைக்கால ஜனாதிபதி ஹான் டக்-சூ அறிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேசம்

# தண்டவாளத்தில் 'ரீல்ஸ்' எடுத்தவர் கைது

ரயில் தண்டவாளத்தில் படுத்து ரயில் வரும்போது அலைபேசியில் ரீல்ஸ் எடுத்தவர் கைது செய்யப்பட்டார்.

உத்தரப்பிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டம் ஹசன்கஞ்ச் பகுதியைச் சேர்ந்தவர் ரஞ்சித் சவுராசியா. இவர் அலைபேசியில் ரீல்ஸ் எடுப்பதில் ஆர்வம் கொண்டவர்.

இந்நிலையில், குஸூம்பி ரயில் நிலையம் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் சென்ற இவர் தண்டவாளத்தில் படுத்துக் கொண்டு ரயில் வரும்போது ரீல்ஸ் எடுத்துள்ளார்.

ஆபத்தான முறையில் அவர் தண்டவாளத்தில் படுத்திருந்தார். சிறிது பிசகினாலும் அவர் ரயிலில் அடிபட்டு உயிரிழக்க வாய்ப்பு இருந்தது.

அத்துடன், இவர் எடுத்த வீடியோவை, சமூக வலைத்தளங்களிலும் வெளியிட்டார்.

இந்த வீடியோ வைரலானதைத்



தொடர்ந்து அது ரயில்வே பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து ரயில்வே பொலிஸார், சவுராசியா மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர்.

**"ஆபத்தான முறையில் அவர் தண்டவாளத்தில் படுத்திருந்தார். சிறிது பிசகினாலும் அவர் ரயிலில் அடிபட்டு உயிரிழக்க வாய்ப்பு இருந்தது**







3ஆவது தேசிய கைப்பந்து சாம்பியன்ஷிப்

# இலங்கை கடற்படை வென்றது

மூன்றாவது தேசிய கைப்பந்து போட்டித் தொடர், 2025 (03rd National Handball Championship) பனாகொடை இராணுவ உட்புற மைதானத்தில் ஏப்ரல் 03 முதல் 06ஆம் திகதி வரை வெற்றிகரமாக நடைபெற்றது.

அதன்படி, 07 அணிகள் பங்கேற்ற 03ஆவது தேசிய ஹேண்ட்பால் போட்டியில், கடற்படை அணி கொத்தலாவல பாதுகாப்பு அகாடமி அணியை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இராணுவ அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில்இ கடற்படை வீரர்கள் அற்புதமாக விளையாடி இராணுவ அணியை 34 - 41 கோல்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து, கடற்படையினர் 03வது தேசிய கைப்பந்து சாம்பியன்ஷிப்பை வென்றனர்.

மேலும், போட்டித் தொடரில் விதிவிலக்கான திறன்களை வெளிப்படுத்திய பின்வரும் கடற்படை வீரர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. சிறந்த தாக்குதல் வீரர்: டபிள்யூ.ஆர்.வீரசிங்க,

சிறந்த தற்காப்பு வீரர்: டபிள்யூ.எச்.பி.டி.சில்வா,

சிறந்த வலைப்பந்தாட்ட வீரர்: டி.எஸ்.டி சில்வா.

ஐ.பி.எல்:

## சென்னையை வென்ற பஞ்சாப்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), முல்லான்பூரில் செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்

பஞ்சாப்: 219/6 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: பிரியன்ஷ் ஆர்யா 103 (42), ஷஷாங்க் சிங் ஆ.இ 52 (36), மார்கோ ஜன்சன் ஆ.இ 34 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: கலீல் அஹ்மட் 2/45 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 2/48 [4], முகேஷ் சௌத்ரி 1/21 [2], நூர் அஹ்மட் 1/32 [3], இரவீந்திர ஜடேஜா 0/18 [3]) . சென்னை: 201/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே 69 (49), ஷிவம் டுபே 42 (27), றஷின் றவீந்திர 36 (23), மகேந்திர சிங் டோணி 27 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: லொக்கி பெர்கியூசன் 2/40 [4], கிளென் மக்ஸ்வெல் 1/11 [2], யஷ் தக்கூர் 1/39 [4], அர்ஷ்டீப் சிங் 0/39 [4], யுஸ்வேந்திர சஹால் 0/9 [1])

போட்டியின் நாயகன்: பிரியன்ஷ் ஆர்யா

இந்நிலையில் பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு எதிர்கொள்ளவுள்ளது.



"ஆடுகளத்தை பற்றி

## கூற விரும்பவில்லை"



சர்ச்சையை ஏற்படுத்துமென்பதால், கொல்கத்தா ஆடுகளத்தைப் பற்று பொதுவெளியில் எதுவிதக் கருத்துக்களையும் கூற விரும்பவில்லையென இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸின் அணித்தலைவர் அஜின்கியா ரஹானே தெரிவித்துள்ளார்.

லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுக்கெதிரான செவ்வாய்க்கிழமை (08) போட்டியைத் தொடர்ந்தே குறித்த கருத்துகளை ரஹானே வெளிப்படுத்தியுள்ளார்.

இப்போட்டியின் 40 ஓவர்களில் 472 ஓட்டங்களைப் பெறப்பட்டதோடு, 10 விக்கெட்டுகளே வீழ்த்தப்பட்டிருந்தன.

கொல்கத்தா ஆடுகளப் பரமாரிப்பாளர் சுஜன் முகர்ஜிக்கும், நைட் றைடர்ஸுக்குமிடையே ஆடுகளத்தின் தன்மையை யார் தீர்மானிப்பதென்ற முரண்பாடுகளுக்கு மத்தியிலேயே இக்கருத்து வெளியாகியுள்ளது. சுழற்பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளம் கோரப்பட்டிருந்தது.

இதற்கு முந்தைய சண்றைசர்ஸ் ஹைதரபாத்துக்கெதிரான போட்டியில், ஐந்து நாள்களுக்கு தண்ணீர் விடப்படாத இரண்டு ஆடுகளங்களிலொன்றை தெரிவு செய்யுமாறு நைட் றைடர்ஸைக் கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில் தான் எதையாவது உணர்ந்தால் ஐ.பி.எல்லுக்கு சொல்லுவேன் எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைப்பேன் என ரஹானே கூறியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 10, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.